**இமதுவ பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூன் 14 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து இமதுவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2016 ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட கோம்பல ஹொரமடுள்ள சமூக நீர் செயற்திட்டத்தை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக முன்னைய ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 267,583 இற்கான தொகை மூலதன உதவியின் கீழ் கணக்கீடு செய்யாமையால், மீளாய் வாண்டின் போதும் சரி செய்திருக்க வில்லை. | கணக்குகள் சரிசெய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | வீதி விளக்குகள் பராமரிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டி ருந்த ரூபா 50,000 இற்கான தொகை செலுத்த வேண்டிய மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்யப் பட்டிருந்தது. | கணக்கீடு செய்தல் சரிசெய்யப்பட வேண்டும். | மீளாய்வாண்டு அத் தொகை செலுத்தப்பட்டி ருக்காமையால் செலுத்த வேண்டிய மூலதனச் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மூலதனச் செலவுகள் ரூபா 119,558 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீடு சரிசெய்யப்பட வேண்டும். | அபிப்பிராயம் தெரிவித்திருக்கவில்லை. |
| (iv) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் படி மூலதனச் செலவுகளின் கீழ் ரூபா 1,275,252 தொகை செலவு மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாண வேலைகளை மூலதனப்படுத்தியிருக்க வில்லை | நிலையான சொத்துக்களை சரியாக மூலதனப்படுத்த வேண்டும். | 2019 ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள கூட்டுத்தொகை ரூபா 1,953,456 இற்கான 05 கணக்கு விடயங்கள் உரிய மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 202,980 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 ஆண்டு முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 201,325 தொகைக்கான பெற வேண்டிய 04 கணக்கு மீதிகளை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய கணக்குகளை அறவிடப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 69,845,259 தொகைக்கான 11 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 149 | 31,131 | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப் பட்டு வந்த சிற்றுண்டிச் சாலை ஒன்றில் இருந்து 2015 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை அறவீடு செய்ய வேண்டிய வரி அறவீடு செய்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் குறித் தொதுக்கிய வரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 103 மற்றும் 104 | 15,000 | 2018 ஆம் ஆண்டின் போது காணாமல் போன காசு தொடர்பாக அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணாமல் போன காசு தொடர்பாக நிதிப் பிரமாண ங்களின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2015 ஜுலை 10 ஆந் திகதி 02/2015 நிதி அமைச்சின் சுற்றறிக்கை | -- | சபைக்குச் சொந்தமான 04 வாகனங்கள் பல வருட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் சபையின் வளவு ஒன்றில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், அப்புறப்படுத்துதவற்கான அலுவல்கள் மேற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் அங்கீகாரத்தின் படி ஜுன் 30 ஆந் திகதிக்கு முன்னர் இரும்புக்காக விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,642,431 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,843,369 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 518,900 | 610,325 | 255,422 | 594,425 | 151,200 | 123,209 | 300,260 | 248,391 |
| வாடகை | 4,771,000 | 888,150 | 989,950 | - | 3,10-0,000 | 3,139,202 | 3,154,202 | - |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 150,000 | 212,000 | 260,700 | 177,366 | 200,000 | 153,700 | 170,900 | 152,466 |
| ஏனைய வரு மானங்கள் (கருவா பயிர் செய்கை) | 450,000 | - | - | - | 2,900 | - | 21,106 | - |
| | 5,889,900 | 1,710,475 | 1,506,072 | 771,791 | 3,454,100 | 3,416,111 | 3,646,468 | 400,857 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 5,889,900 தொகையாக காணப்பட்டதுடன், சிட்டை யிடப்பட்ட வருமானம் ரூபா 1,710,475 ஆக இருந்தது. ரூபா 400,857 தொகை ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டியிருந்த மொத்த தொகை ரூபா 2,111,332 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 1,506,072 தொகையாக காணப்பட்டமையால், வருமானம் சேகரிக்தலின் முன்னேற்றம் 71 சதவீதமாக இருந்தது. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 248,391 ஆக இருந்ததுடன், ரூபா 610,325 தொகை ஆண்டிற்கான சிட்டையிடலுடன், ரூபா 858,716 தொகை அறவிடப்பட வேண்டி இருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 255,422 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் ரூபா 594,425 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வீதவரி நிலுவையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 வாடகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப் பட்ட வாடகை வருமானம் ரூபா 4,771,000 தொகை எனினும் ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 888,150 தொகையாக காணப்பட்டதுடன், மொத்த அறவீடுகள் ரூபா 989,959 தொகை ஆக இருந்தது. மதிப்பீட்டு வருமானத்தில் 81 சதவீதம் குறைவாக சிட்டையிடப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு வருமானத்தின் படி சிட்டையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### .2.5 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கருவா பயிர்செய்கை செயற்திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 450,000 இற்கான வருமானம் ஒன்று மதிப்பீடு செய்திருந்த போதிலும், வருமானம் ஏதும் உழைத்திருக்கவில்லை. | மதிப்பீட்டு வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 17,982,810 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 3,281,971 தொகை பெறவேண்டி இருந்தது. | பெற வேண்டிய வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

#### (அ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை (out come) பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான போகஹகொட வாராந்தச் சந்தை அபிவிருத்தி மற்றும் நகர அபிவிருத்திக்காக காணி ஒன்று கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,280,000 கடன்தொகை ஒன்று 2014 ஆம் ஆண்டின் போது பெற்றிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,111,786 இற்கான கடன் தவணை மற்றும் வட்டி செலுத்தப்பட்டிருந்தது. இந்த கடன் தொகை வாராந்த சந்தை நிர்மாணிப்பதற்காக காணி ஒன்று கொள்வனவு செய்யும் போது நட்டஈடு வழங்குவதற்காக பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்திருந்த போதிலும் இது வரை காணி ஒன்று கொள்வனவு செய்திருக்கவில்லை. | காணி கொள்வனவு செய்து குறிப்பிட்ட கருமத்திற்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். | சந்தைப் பூமியின் அனுபவிக்கும் உரிமையை பிரதேச சபை பொறுப்பேற்று இருந்ததுடன், சந்தையின் அபிவிருத்தி வேலைக்காக பூமியை தயாரிப்பதற்குரிய ஆரம்ப விடங்கள் தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ளன. |

**(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 20 ஆந் திகதிய 2015/53 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் படி சபையினால் குப்பை முகாமைத்துவம் தொடர்பாக நீண்காலத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | குப்பை முகாமைத் துவத்திற்காக முறையான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்க நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையில் கடமையாற்றும் பல்வேறு பதவிகளைச் சேர்ந்த 08 ஊழியர்களுக்கு நிரந்தரப் பதவிக்கு உரித்தில்லாத கடமைகளில் ஈடுபடுத்துவதன் காரணமாக சபை அலுவலக உதவியாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. | நிரந்தரமாக கடமைகள் சாட்டுவதற்கும் கடமை அலுவல்களை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (ஆ) | பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப் பட்ட பதவிகளில் காணப்பட்ட 04 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை ஊழியர் எண்ணிக்கை 01 இனை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணித் திட்டத்தின் படி பதவியணியை முறைப்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 செலவு விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 25,196,002 தொகைக் கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அவை 37 முதல் 80 வரை சதவீத வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (ஆ) | 04 வருமான விடயங்களின் நெருங்கி இருக்காத இலக்கு வருமானங்களில் கூட்டுத்தொகை ரூபா 13,827,748 தொகையாக இருந்ததுடன், அப் பெறுமதிகள் 21 முதல் 78 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (இ) | ஓய்வூதியம், ஓய்வூதிய நலன்கள் மற்றும் பணிக்கொடைகள் செலவு விடயத்தின் பிரதிகூலமான முரண்கள் 67 சதவீதமாகக் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2009 ஜுன் 09 ஆந் திகதிய DMA/2009(i) இலக்கங் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |